பறவைகள் சரணாலயம்

*5077—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டை ஒன்றியம், தளவாய்புரத்தை பறவைகள் சரணாலய மாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: அவைத் தலைவரவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், தளவாய்புரத்தை பறவைகள் சரணாலயமாக அறிவிக்கும் திட்டம் இல்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தென் மாவட்டத்தைப் பொறுத்தவரை மூண டைப்பு பகுதியில்தான் வெளிநாட்டிலிருந்து பறவைகள் வந்து தங்குகின்ற சரணாலயம் அமைவதற்கு திட்டம் முன்பு இருந்து வந்தது. தற்போது மக்கள் நெருக்கத்தின் காரணமாகவும், வாகனப் போக்குவரத்தின் காரணமாகவும் அங்கே பறவைகள் செல்வது இல்லை. அந்தப் பறவைகளெல்லாம் தளவாய் புரத்திற்கு வருகின்ற காரணத்தால் பறவைகள் சரணாலயம் அமைக்கின்ற திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, பறவைகள் இருந்தால் சரணாலயம் அமைக்க முடியும். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. குருநாதன் அவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். மூணடைப்பு பகுதிக்குப் பறவைகள் வருவது இல்லை என்று. இதற்கு முக்கியமான காரணம், பேருந்துகள் அதிகமாக அந்தப் பகுதி யிலே வந்தது என்பது ஒரு காரணமாக இருந்தாலும், முக்கிய மான காரணம், அங்கே இருக்கக்கூடிய குளத்திலே தண்ணீர் இல்லை. தண்ணீர் இருந்தால்தான் பறவைகள் வரும். ஆகவே, இந்த இடத்திற்கு, தளவாய்புரத்திற்கு அதிகமாகப் பறவைகள் வந்தால் அங்கே சரணாலயம் அமைக்க நாம் யோசிக்கலாம்.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தற்பொழுது பாளையங்கோட்டை ஒன்றியத்திலே இருக்கின்ற அந்தத் தளவாய்புரத்திற்கு உலகில் பல்வேறு நாடு களிலிருந்து பறவைகள் வருவதை நானும் அங்கே கண்டிருக் கின்றேன். அந்தக் கிராம மக்களும் தற்போது அந்தப் பறவை களுக்குப் புகலிடம் அளித்து வருகின்ற காரணத்தால் அதைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கின்ற திட்டத்தை இந்த அரசு எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, உறுப்பினரவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டி, இங்கே மட்டுமல்ல, இன்னும் அருகில் இருக்கக்கூடிய முனைஞ்சிப்பட்டி பக்கத்திலேகூட இப்படிப்பட்ட பறவைகள் அதிகமாக வந்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்தப் பகுதியிலே ஒரு பறவைகள் சரணாலயம் அமைக்க நாம் வழிமுறைகளைக் காணலாம்.

துரைப்பாக்கம் கிராமம் ஒக்கியத்தில் அணை கட்டுதல்.

*923—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாம்பரம் தொகுதி, துரைப்பாக்கம் கிராமத்தில் ஒக்கியத்தில் ஒரு அணை கட்டி விவசாயத்தையும், குடிநீரையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தாம்பரம் தொகுதி, துரைப்பாக்கம் கிராமத்தில் ஒக்கியத்தில் ஒரு அணைகட்டி விவசாயத்தையும் குடிநீரையும் பாதுகாக்க அரசு ஒரு திட்டத்தை 26.60 இலட்சத்தில் தயாரித்திருக்கிறது. அந்த அறிக்கை ஆய்வில் இருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒக்கியத்திற்கு வருகிற தண்ணீர் தாம்பரத்திலிருந்து சற்றொப்ப 15 கிலோ மீட்டர் தூரத்திலே வருகின்ற நீர் அனைத்தும் சேர்ந்து செல்கிற பகுதி. இங்கே வந்து தேங்குகிற தண்ணீர் கடல் நீரோடு கலந்து விடுகிற காரணத்தால் 3, 4 கிராமங்களில் குடிநீரும், விவசாய நீரும் உவர் நீராக மாறி விடுகின்ற காரணத்தால் அரசு இதை விரைந்து செயல்படுத்துமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத்தான் அரசு இந்த அணையைக் கட்டினால் விவசாயத்திற்குப் பயன்படுமா, அதற்கு மண் வளம் தக்கதாக இருக்கிறதா என்று விவசாய இலாக்காவிடத்திலே ஒபினியன் கேட்டிருக்கிறது. எனவே, விவசாய இலாக்காவிடமிருந்தும் நமக்கு அறிக்கை வர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அப்படி மண்வளம் தக்கதாக இருக்கிறது என்று சொன்னால் சுமார் 306 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அளிக்கக் கூடிய வகையில் இந்தத் திட்டம் அமையும்.